விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 114 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 29 சனிக்கிழமை (12.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழில் தேர்தல் விதிமுறைகளை மீறிய பிரதமர் ஹரிணி அமரசூரிய


### முறைப்பாட்டையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் தேர்தல் விதிமுறைகளை மீறி பிரதமர் ஹரிணி அமரசூரிய பரப்புரைக் கூட்டங்களில் பங்கெடுக்கின்றார் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதையடுத்து தேர்தல்கள் 15

## மாவைக் கந்தனின் கும்பாபிஷேகம்



# மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும்

## யாழில் பிரதமர் ஹரிணி அமரசூரிய



(யாழ்ப்பாணம்)

**மாகாண சபைத் தேர்தல் கூடிய விரைவில் நடத்தப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதியளித்தார்.**

**யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர் மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.**

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

06 மாத காலப்பகுதியில் 03 தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில் நான்காவது தேர்தலாக மாகாண சபைத் தேர்தலை நடத்த தமது அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும்,

அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கமே தற்போது உள்ளதாகவும் இம்முறை பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் பெரும்பான்மையாக இருக்கின்றமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் பிரதமர் குறிப்பிட்டார். 15

## வவுனியாவில் கோடாவுடன் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் கோடாவுடன் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸ் 15

### தீக்காயங்களுக்குள்ளான

## குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இதில் தலைமன்னாரைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் 15

### பிரதமரின் வருகையையொட்டி

## மாவைக் கந்தன் கும்பாபிஷேகத்தில் கடும் பாதுகாப்புக் கெடுபிடிகள்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயச் சூழலில் பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக ஆலயத்திற்குச் சென்ற பக்தர்கள் இன்னல்களை எதிர்நோக்கினர்.

சுமார் 50 வருட காலத்தின் பின்னர் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் 15

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுவதற்கு நான் தயார்

### முன்னாள் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆஜராகுவதற்கு நான் தயாராகவுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15

## திருநெல்வேலியில் டிப்பர் மோதியதில் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் டிப்பர் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் திருநெல்வேலி பலாலி வீதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான சரவணபவான் மகேஸ்வரி (வயது-85) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் திருநெல் 15

### நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின்

## வடக்கு வளைவுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் செல்லும் நுழைவாயில்கள் 15



### அதிவேக நெடுஞ்சாலையில்

## வங்கி அட்டையில் பணம் செலுத்தலாம்

(கொழும்பு)

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது வங்கி அட்டைகளைப் பயன் படுத்தி கொடுப்பனவை மேற்கொள்ளும்நடவடிக்கை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மதம், கலாசார சுதந்திரத்தை உறுதிசெய்வது அனைவரது பொறுப்பு

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

*(யாழ்ப்பாணம்)*

நாட்டில் மதம் மற்றும் கலாசார சுதந்திரத்தை உறுதிசெய்வது நம் அனைவரின் பொறுப்பாகும் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வில் நேற்று கலந்துகொண்ட போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வளமான மற்றும் ஒன்றுபட்ட நாட்டில் மத மற்றும் கலாசார சுதந்திரத்தை உறுதி செய்வது நம் அனை வரின் பொறுப்பாகும்.

வடக்கு மற்றும் தெற்கின் கலாசார மைய அமைப்புகளை சமமாகப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம்.

மத மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நாடு என்ற வகையில், மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கான இத்தகைய சிறப்புமிக்க இடங்களை எந்தவித அடக்குமுறையும் இல்லாமல் பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பாகும் என்றார். *(ம-4,7)*

# தையிட்டியில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

"பௌத்தம் உன் மதம் வழிபடு தையிட்டி எம் நிலம் வழிவிடு" எனும் தொனிப் பொருளில் தையிட்டியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

வலி வடக்கு தையிட்டி பிரதேச பொதுமக்கள் காணிக்குள் அத்துமீறி கட்டப்பட்ட விகாரையைச் சுற்றியுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரியே இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. *(ம-4,7)*

# புத்தாண்டை முன்னிட்டு கைதிகளை பார்வையிட

## விசேட வாய்ப்பு

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை திறந்த வெளியில் பார்வையிட அவர்களது உறவினர்களுக்கு விசேட வாய்ப்பை வழங்க சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் இந்த விசேட வாய்ப்பை வழங்க சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த தினங்களில் கைதிகளின் உறவினர்கள் ஒரு கைதிக்கு தேவையான உணவுப்பொதிகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் அடங்கிய ஒரு பொதியை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அனைத்து சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய உறவினர்கள் கைதிகளை பார்வையிட நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது. *(ம-4,7)*

# இலங்கையை மதிப்பிட மேலும் அவகாசம் தேவை

## சர்வதேச நாணய நிதியம்

உலகளாவிய அதிர்ச்சிகளின் தாக்கத்தை இலங்கையில் மதிப்பிடுவதற்கு மேலும் காலம் தேவை என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான விஜயத்தை முடித்த பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஸ்ட தூதுக்குழுவின் தலைவர் இவான் பபாஜியோர்ஜியோ தலைமையிலான குழு இந்தக் கருத்தை வெளியிட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஆதரவுடன் செயற்படுத்தப்படும் இலங்கையின் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகளை செயற்படுத்துவதில் உள்ள முன்னேற்றம் மற்றும் சமீபத்திய பொருளாதாரப் போக்குகள் குறித்து கலந்துரையாடுவதற்காக இந்தக் குழு கடந்த 3 ஆம் திகதி நாட்டிற்கு விஜயம் செய்திருந்தது.

அதன்படி தமது தூதுக்குழு பணியை முடித்துக் கொண்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அந்தக் குழு சமீபத்திய வெளிப்புற அதிர்ச்சிகளும் நாளாந்தம் வளர்ந்து வரும் உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளும் தொடர்ந்து வழமைக்கு திரும்பி வரும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உலகளாவிய அதிர்ச்சியின் தாக்கத்தையும் இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் ஏற்படக்கூடிய தாக்கத்தையும் மதிப்பிடுவதற்கு மேலதிக காலம் தேவை என்றும் அந்தத் தூதுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. *(ம-4,7)*

# ரூ 10 ஆயிரம் பணம் தரப்படும் எனும் தகவல் உண்மைக்குப் புறம்பானது

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு 10 ஆயிரம் ரூபாய் பணம் தருவதாக கூறி வெளிநாட்டில் இயங்கும் யூரியூப் தளம் ஒன்றினால் வெளியிடப்பட்ட தகவல் உண்மைக்குப் புறம்பானது என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இதற்காக புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் கடவுச்சீட்டின் நகலை நாட்டில் உள்ள எந்தவொரு பணியக அலுவலகத்திலும் சமர்ப்பிக்கலாம் என அந்த வீடியோவில் கூறப்படுகிறது.

எனினும் பணியகம் இது போன்ற ஒரு அறிக்கையை ஒருபோதும் வெளியிட்டதில்லை என்றும் இந்த மோசடியில் சிக்கி யாரும் ஏமாற வேண்டாம் என்றும் பணியகம் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

இதுவரை இதுபோன்ற ஒரு திட்டத்தை பணியகம் செயற்படுத்தவில்லை என் றும் இது புலம்பெயர்ந்த சமூகத்தை தவறாக வழிநடத்தும் நோக்கம் கொண்ட பிரச்சாரம் மட்டுமே என்றும் பணியகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இதுபோன்ற பொய்யான பிரச்சாரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் புலம்பெயர்ந்த சமூகத்தை பணியகம் கேட்டுக்கொள்கிறது. *(ம-4,7)*


## தேவை

காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்துக்காக மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட J/425, J/426, J/428 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் மாமுனை தொடக்கம் மருதங்கேணி வரையான கடற்கரை வீதிக்கு இரு புறமும் காணிகளை வாங்குவதற்கும் நீண்ட கால குத்தகைக்கு பெற்றுக்கொள்ளவும் தயாராக உள்ளோம்.

இந்தப் பிரதேசங்களில் காணிகளை விற்கவோ அல்லது குத்தகைக்கு வழங்கவோ விரும்பியோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

நிறுவனம் :
Musalpetti Wind Power (Pvt) Ltd
முகவரி :
இல 310, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல : 077 455 9949

(3892)

## பெண் பணியாளர் தேவை

யாழ்.நகரில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு சமையல் உதவிகள் செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை. 45 வயதிற்கு மேல் விரும்பத்தக்கது.

**076 897 2637**
**077 869 5354**

(3927)

## புங்குடுதீவு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் பரிபாலனசபை

## பதவி: மேற்பார்வையாளர்

பரிபாலனசபையின் அனுசரணையுடன் ஆலயத்தில் நாளாந்த செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கு மேற்பார்வையாளர் ஒருவர் தேவை. இப்பதவிக்கு புங்குடுதீவு, நயினாதீவு மற்றும் வேலணைத் தீவினை வசிப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. விண்ணப்பிப்பவர்களுக்கு அவரது நாளாந்த கடமைகள் மற்றும் ஊதியம் தொடர்பாக பரிபாலன சபையால் தெரியப்படுத்தப்படும். கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும். பின்வரும் விலாசத்துடன் 20.04.2025 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ச.தனபாலசிங்கம்
தலைவர்
076 803 5067

தொடர்பு முகவரி
154/4, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

சு.சண்முகானந்தன்
பதில் செயலாளர்
077 031 0655

(3928)

## பதவி வெற்றிடம்

- கணனியில் தமிழ் ரைப்பிங்
  (இருபாலாரும் - அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவர்களும்)
- பக்க வடிவமைப்பாளர்
  (இருபாலாரும் - அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவர்களும்)

தொடர்பு:
076 097 3121

பொதுமுகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.

## வருடாந்த பொதுக்கூட்டம் - 2025

ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 2025ம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காலம் : 27.04.2025 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பி.ப 4.00மணி
இடம் : ஞானசம்பந்தர் கலை மன்ற மண்டபம்

புலோலி வடக்கு,
பருத்தித்துறை


(C-2674)

செயலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக் கந்தனின் கும்பாபிஷேகம்







வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்.மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் மஹா கும்பாபிஷேகம் பங்குனி உத்திர நன்நாளான நேற்று வெள்ளிக்கிழமை சுபவேளையில் இராஜகோபுரம், ஸ்ரீ மஹாவல்லி, ஸ்ரீ கஜவல்லி சமேதராய் வீற்றிருக்கும் மூலவருக்கும் விநாயகர் முதலான ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் பக்தி பூர்வமாக மஹா கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இக் கும்பாபிஷேக நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். (6-8-33)

## பெறுமதிசேர் வரி திருத்த சட்டமூலத்தில் கையொப்பமிட்ட

### சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன



(கொழும்பு)

பெறுமதிசேர் வரி திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன நேற்றுத் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

பெறுமதிசேர் வரி திருத்தச் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றதுடன் குழு நிலையில் சட்டமூலம் ஆராயப்பட்டு திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து மூன்றாவது மதிப்பீட்டையடுத்து வாக்கெடுப்பு இன்றி சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலம் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, இந்த சட்டமூலம் 2025 ஆம் ஆண்டில் 4 ஆம் இலக்க சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமாக அமுலுக்கு வரும்.(6-8)

## உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் தடை உத்தரவு நீக்கம்

### மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

மே 6 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதைத் தடுத்து, கொழும்பு மாநகர சபை உட்பட 18 உள்ளூராட்சி மன்றங்களுக்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீக்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பு மாநகர சபை உட்பட பல உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை மே 16 ஆம் திகதி வரை நடத்துவதைத் தடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை தடை உத்தரவு பிறப்பித்திருந்தது

இந்நிலையில் அந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பித்து நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சட்டமா அதிபரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை பரிசீலித்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் முகமது லாபர் தாஹிர் மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (6-8)

## வரிவிதிப்பு தொடர்பில் ஆராய பொருளியல் நிபுணர்களை

## அமெரிக்காவுக்கு அனுப்பி வையுங்கள்

(கொழும்பு)

அமெரிக்கா விதித்துள்ள பரஸ்பர வரி தொடர்பாக கலந்துரையாடி உரிய திட்டங்களை முன்வைப்பதற்காக பொருளியல் நிபுணர்களை அமெரிக்காவுக்கு அனுப்பிவைக்குமாறும் ஜனாதிபதியிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான சர்வ கட்சி மாநாட்டைத் தொடர்ந்து இக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் வரி விதிப்பு தீர்மானத்தினை ஒத்திவைத்திருந்தாலும் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து ஜனாதிபதிக்கு தான் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.



குறிப்பாக ஆடைத் துறையில் 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் பணியாற்றுகின்றனர் எனவும், இதனூடாக சுமார் ஒரு மில்லியன் பேர் பயனடைகின்றனர் எனவும், நாட்டின் மொத்த ஏற்றுமதியில் ஆடை ஏற்றுமதி 38 வீதமாகும் எனவும், அதில் 28 வீதம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது எனவும், 13 வீதம் ஐக்கிய அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது எனவும், சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஆகவே புதிய வரிவிதிப்பு தொடர்பாக ஆராய பொருளியல் நிபுணர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (6-8)

## கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தில் இந்த ஆண்டு 34 புதிய திட்டங்கள்

(கொழும்பு)


ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தல்களின்படி, அரசாங்கத்தின் பிரதான திட்டமாக செயற்படுத்தப்படும் "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 34 புதிய திட்டங்களை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

செயற்படுத்தப்படவுள்ள முன்மொழிவுகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு அந்த திணைக்களத்தின் மாதிரிக்கு அமைவாக முன்மொழிவுகளைத் தயாரிப்பது தொடர்பில் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கான ஒரு நாள் செயலமர்வு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமா நாயக்க தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலை யில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது

சம்பந்தப்பட்ட திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்ற பின்னர், உரிய வகையில் ஒரு செயல் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாகவும் அதற்கமைய துரிதமாக ஆரம்பிக்க வேண்டிய திட்டங்களை இம்மாத இறுதிக்குள் ஆரம்பிப்பது குறித்தும் இதன் போது ஆராயப்பட்டிருந்தது. நாடளாவிய ரீதியாக செயற்படுத்தப்படவுள்ள "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்திற்கு இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 5 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சொந்த' மண்ணில் 'நொந்த' சென்னை



- தோனியின் தலைமையிலும் வெற்றி கைகூடவில்லை
- கொல்கத்தாவிடமும் வாங்கிக் கட்டியது

துடுப்பாட்டத்தில் தேறாத சென்னை அணி 103 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. தொடர்ச்சியாக 5வது தோல்வியை சந்தித்தது.

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் சென்னை, "நடப்பு சாம்பியன்" கொல்கத்தா அணிகள் மோதின.

**தோனி கேப்டன்**

சென்னை "லெவன்" அணியில் ருதுராஜ், முகேஷ் சவுத்ரி நீக்கப்பட்டு ராகுல் திரிபாதி, அன்சுல் கம்போஜ் தேர்வாகினர். முழங்கை காயத்தால் இத்தொடரில் இருந்து ருதுராஜ் விலகியதால் மீண்டும் அணித் தலைவராக தோனி களமிறங்கினார்.

கொல்கத்தா "லெவன்" அணியில் ஸ்பென்சர் ஜோன்சனுக்கு பதிலாக மொயீன் அலி இடம்பெற்றார்.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணியின் தலைவர் ரகானே, பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**விக்கெட் சரிவு**

சென்னை அணிக்கு ரச்சின் ரவிந்திரா (4), கான்வே (12) ஜோடி ஏமாற்றியது. வருண் சக்ரவர்த்தி வீசிய 6வது ஓவரில் 2 பவுண்டரி விரட்டிய விஜய் சங்கர், மொயீன் அலி பந்தில் ஒரு சிக்சர் விளாசினார். மூன்றாவது விக்கெட்டுக்கு 43 ஓட்டங்கள் சேர்த்தபோது வருண் "சுழலில்" விஜய் சங்கர் (29) சிக்கினார். திரிபாதி (16) நிலைக்கவில்லை. அடுத்து வந்த அஷ்வின் (1), ரவிந்திர ஜடேஜா (0), தீபக் ஹூடா (0) சொதப்பினர். நரைன் பந்தில் அணித் தலைவர் தோனி (1) ஆட்டமிழக்க மைதானமே அமைதியானது.

**துபே ஆறுதல்**

நூர் அகமது (1) ஏமாற்றினார். ஹர்ஷித் பந்தில் ஒரு பவுண்டரி அடித்த ஷிவம் துபே, வைபவ் வீசிய கடைசி ஓவரில் 2 பவுண்டரிகள் விரட்டினார்.

20 ஓவர்கள் நிறைவில் சென்னை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களை எடுத்தது. துபே (31), அன்சுல் கம்போஜ் (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**நரைன் அபாரம்**

சுலப இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு குயின்ரன் டி கொக், சுனில் நரைன் ஜோடி நல்ல ஆரம்பம் வழங்கியது. அன்சுல் கம்போஜ் பந்தில் ஒரு சிக்சர் அடித்த குயின்ரன், கலீல் அகமது வீசிய 3வது ஓவரில் 2 சிக்சர்கள் பறக்கவிட்டார். முதல் விக்கெட்டுக்காக 46 ஓட்டங்கள் சேர்த்த போது கம்போஜ் பந்தில் குயின்ரன் (23) ஆட்டமிழந்தார். கம்போஜ் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய அணித் தலைவர் ரகானே, கலீல் பந்தில் சிக்சர் அடித்தார். கலீல் வீசிய 6வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த நரைன், அஷ்வின் பந்தில் வரிசையாக 2 சிக்சர் பறக்க விட்டார். நூர் அகமது "சுழலில்" நரைன் (44) சிக்கினார்.

நூர் அகமது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரிங்கு சிங், ஜடேஜா பந்தை சிக்சருக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார். கொல்கத்தா அணி 10.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ரகானே (20), ரிங்கு (15) அவுட்டாகாமல் இருந்தனர். (ம-4,7)



**தோனி "அவுட்" சர்ச்சை**

சுனில் நரைன் வீசிய 16வது ஓவரின் 3வது பந்தில், சென்னை அணியின் தலைவர் தோனிக்கு "எல்.பி.டபிள்யு" முறையில் "அவுட்" வழங்கப்பட்டது. இதை எதிர்த்து தோனி "ரிவியூ" கேட்டார். மூன்றாவது அம்பயர் வினோத் சேஷன், பலமுறை "ரீப்ளே" செய்து பார்த்தார். "அல்ட்ரா எட்ஜில்" லேசான அதிர்வு இருந்தாலும் பந்து துடுப்பில் பட்டது உறுதியாகவில்லை. இதனையடுத்து 3ஆவது அம்பயர் தோனிக்கு "அவுட்" வழங்கினார். இது சர்ச்சையை ஏற்படுத்தியது.

# ரோஹித் சர்மாவை மும்பை கப்டனாக்க வலியுறுத்தும் ரசிகர்கள்

## வைரலாகும் மீம்ஸ்



நடப்பு ஐ.பி.எல் தொடரில் மீதமிருக்கும் போட்டிகளுக்கு மும்பை இந்தியன்ஸ் கப்டனாக ரோஹித் சர்மாவை நியமிக்கக் கோரி இணையத்தள ரசிகர்கள் மீம்ஸ்களை வெளியிட்டு வருகின்றனர்.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் 5 முறை சம்பியன்களான சென்னை மற்றும் மும்பை அணிகள் தொடர் தோல்வியைச் சந்தித்து வருகின்றன.

இரு அணிகளும் ஒரு போட்டியில் மட்டும் வெற்றிபெற்று புள்ளிப் பட்டியலில் மும்பை அணி 8 ஆவது இடத்திலும் சென்னை அணி 9 ஆவது இடத்திலும் இருக்கின்றன.

சென்னை அணியின் தற்போதைய கப்டன் ருதுராஜ் கெய்க்வாட் காயத்தால் விலகியதால். மீண்டும் சென்னை அணியின் கப்டனாக டோனி பொறுப் பேற்றுக் கொண்டுள்ளார்.

அதேவேளையில் மும்பை அணியின் கப்டனாக ஹார்திக் பாண்டியா நியமிக்கப்பட்டதில் இருந்து பழைய கப்டன் ரோஹித் சர்மாவின் ஆலோசனைகளையோ அவரின் தலைமையையோ யாரும் விரும்பவில்லை. மேலும், அவர் இம்பாக்ட் வீரராக மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்.

டோனி கப்டனாக இல்லாத போது சென்னை அணி 42 சதவிகிதப் போட்டிகளில் வென்றிருந்தாலும், மும்பை அணி ரோஹித் இல்லாத போது வெறும் 26 சதவிகிதப் போட்டிகளில் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறது.

இதனால், ஹார்திக் பாண்டியா தொடரிலிருந்து விலக வேண்டும் என்றும் அதற்கு பாண்டியா ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும், ரோஹித் சர்மாவே மீண்டும் கப்டனாக வேண்டும் என்றும் ரசிகர்கள் வலியுறுத்தி மீம்ஸ்களை பகிர்ந்து வருகின்றனர். (6-8)

# பில்டிங் ஸ்ராங்கு, பேஸ்மண்ட் வீக்கு... பெங்களூரின் மோசமான சாதனை

பெங்களூரு சின்னசாமி திடலில் அதிக தோல்விகளைச் சந்தித்து பெங்களூர் அணி மோசமான சாதனையைப் படைத்துள்ளது.

நடப்பு ஐ.பி.எல் தொடரில் புதிய கப்டன் ரஜத் படிதார் தலைமையில் முதலிரண்டு போட்டிகளில் கொல்கத்தா, சென்னை ஆகிய அணிகளை வெற்றி கொண்ட பெங்களூர், உள்ளூர்த் திடலில் நடைபெற்ற போட்டியில் குஜராத்திடம் தோல்வி யைத் தழுவியது.

பின்னர் மும்பையில் நடைபெற்ற போட்டியில் மும்பையை வென்று சாதனை படைத்த அடுத்த போட்டியே டில்லிக்கு எதிராகத் தோல்வியடைந்து வெளியே நடைபெற்ற 3 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள பெங்களூர் அணி சொந்தத் திடலில் நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் தோல்வியையே தழுவியிருக்கிறது.

சின்னசாமி மைதானத்தில் இவ் அணியின் 45 ஆவது தோல்வி இதுவாகும். இது ஒரு அணியின் சொந்த மைதானத்தில் பெற்ற அதிகபட்ச தோல்வியாகும்.

பெங்களூருக்கு அடுத்தபடியாக டில்லி கப்பிடல்ஸ் அணி அருண் ஜெட்லி மைதானத்தில் 44 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. இவர்களுக்கு அடுத்ததாக நடப்பு சம்பியன் கொல்கத்தா ஈடன் கார்டன் திடலில் 38 போட்டிகளில் தோல்வியடைந்து மூன்றாவது இடத்தில் இருக்கிறது. (6-8)

# இன்றைய ஆட்டங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும்

(குருமன்காடு)

மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

வனவள மற்றும் வன ஜீவராசிகள் திணைக் களத்துடன் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் நேற்று முன்தினம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், விவசாயிகள் தொடர்பாக எமது அரசாங்கம் கவனம் செலுத்தி அவர்களுக்கு சாதகமான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதேபோல் கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் மேய்ச்சல் தரை தேவை காணப்படுகின்றது.

அதற்காக கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை வனப் பிரதேசத்தில் மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்கும் நாம் வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளோம். இதற்கு சாதகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது.

எனவே, கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் எதிர்காலத்தில் எமது அரசாங்கம் சிறந்த தீர்வைத் தரும். வன்னி வாழ் மக்களே நீங்கள் தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்துவதன் மூலம் உங்களுக்கான தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார். (6-8-250)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி அறிவியல்நகர் வளாகத்தில் அமைந்துள்ள பிரதிப் பதிவாளர் பணிமனையில் பிரதிப்பதிவாளர்/கிளிநொச்சி பொது நிர்வாகக் கிளை அவர்களால் 23.04.2025 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பொறியியற்பீட உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| தொழில்நுட்ப பீட உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| விவசாய பீட உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| விவசாய பீட புதிய உணவகம் (Juice Canteen) | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| ஆண்கள் மாணவர் விடுதி உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |
| பெண்கள் மாணவர் விடுதி உணவகம் | அறிவியல்நகர், கிளிநொச்சி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000268 இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/= இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000276 இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொது நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொது நிர்வாகக் கிளை (தொலைபேசி இல 021 206 0180) மூலம் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர் (சி-2671)

## அரசாங்க அறிவித்தல்
## பகிரங்க ஏல விற்பனை
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களின் அலுவலகப் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட தளபாடங்கள், வளிபதனாக்கிகள், கணினிகள், பிரிண்டர்கள், ரயர்கள், மின்சார உபகரணங்கள், கட்டடங்களிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் என்பன பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் நாவற்குழி அரச களஞ்சியசாலை மற்றும் உரிய அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் வேலை நாளில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் ஏல விற்பனைக்குரிய காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் (பொது 172) பெற்று அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

வருடாந்த ஏல விற்பனை-2025

| இல | அலுவலகம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள திகதி | நேரம் | ஏல விற்பனை நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1 | பிரதேச செயலகம் பருத்தித்துறை | 21.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ பருத்தித்துறை |
| 2 | பிரதேச செயலகம் கரவெட்டி | 21.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 11.00 | பி.செ கரவெட்டி |
| 3 | பிரதேச செயலகம் தெல்லிப்பளை | 22.04.2025 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | பி.செ தெல்லிப்பளை |
| 4 | பிரதேச செயலகம் உடுவில் | 22.04.2025 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 11.00 | பி.செ உடுவில் |
| 5 | பிரதேச செயலகம் நெடுந்தீவு | 22.04.2025 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 10.30 | பி.செ நெடுந்தீவு |
| 6 | பிரதேச செயலகம் காரைநகர் | 23.04.2025 (புதன் கிழமை) | மு.ப 09.30 | பி.செ காரைநகர் |
| 7 | பிரதேச செயலகம் சங்கானை | 23.04.2025 (புதன் கிழமை) | மு.ப 10.30 | பி.செ சங்கானை |
| 8 | பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் | 23.04.2025 (புதன் கிழமை) | மு.ப 11.30 | பி.செ சண்டிலிப்பாய் |
| 9 | பிரதேச செயலகம் வேலணை | 24.04.2025 (வியாழக் கிழமை) | மு.ப 09.30 | பி.செ வேலணை |
| 10 | பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை | 24.04.2025 (வியாழக் கிழமை) | மு.ப 11.00 | பி.செ ஊர்காவற்றுறை |
| 11 | பிரதேச செயலகம் மருதங்கேணி | 25.04.2025 (வெள்ளிக் கிழமை) | மு.ப 09.30 | பி.செ மருதங்கேணி |
| 12 | பிரதேச செயலகம் சாவகச்சேரி | 25.04.2025 (வெள்ளிக் கிழமை) | மு.ப 11.30 | பி.செ சாவகச்சேரி |
| 13 | பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் | 28.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 09.30 | பி.செ யாழ்ப்பாணம் |
| 14 | பிரதேச செயலகம் கோப்பாய் | 28.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 10.30 | பி.செ கோப்பாய் |
| 15 | பிரதேச செயலகம் நல்லூர் | 28.04.2025 (திங்கட்கிழமை) | மு.ப 11.30 | பி.செ நல்லூர் |
| 16 | மாவட்டச் செயலகம்-யாழ்ப்பாணம் | 29.04.2025 (செவ்வாய்க்கிழமை) | மு.ப 09.30 | நாவற்குழி அரச களஞ்சியசாலை |

ம.பிரதீபன்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர் (பதில்),
யாழ் மாவட்டம். (சி-2672)

# இராசிபலன்

12.04.2025
பங்குனி 29, சனிக்கிழமை
பூரணை பின்னிரவு 5.51 மணிவரை
அத்தம் மாலை 6.22 மணிவரை

சுபநேரம் 3.06-4.36 மணிவரை
இராகுகாலம் 9.06-10.36 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்-சதயம், பூரட்டாதி

வளவன்



புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல் நலன் சீராகும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.



சுப காரியங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தன வரவு திருப்தி வகையில் அமையும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



பெற்றோர் மீது பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், நினைத்த காரியம் நிறைவேறும் நாள், நண்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு.



தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர் நண்பர்களின் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.



வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு, பொருட் சேர்க்கைக்கு வழி செய்வீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் கூடும்.



நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.



காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும், சுப விரயங்கள் அதிகரிக்கும், சயனசுகக் குறைவான நாள்.



பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கை கூடும், குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொண்டு நடப்பார்.



உறவினர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள்ளுவார்கள், தொலை தூரத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள்.



இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பகையொன்று நட்பாகலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, தொழிலில் கவனம் தேவை, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.



குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.

வாலிபப் பருவத்தில் கல்விப் பயணத்தைத் தானமாகக் கடந்து செல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே 1 ஆம் திகதி முதல்

# அலுவலக சேவையில் ஈடுபடும்

## பேருந்துகளுக்கு அனுமதிப்பத்திரம் கட்டாயம்

### மீறினால் சட்டம் பாயும்– வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

(யாழ்ப்பாணம்)

**மே மாதம் 1 ஆம் திகதியிலிருந்து அலுவலக போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் தற்காலிக அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபட முடியாது எனவும் அவ்வாறு சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் நேற்று ஊடகங்களுக்கு விடுத்துள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக அலுவலர்களுக்கான போக்குவரத்து சேவையை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.


அலுவலர்களுக்கான விசேட போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான படிமுறைகள் தொடர்பான பத்திரத்துக்கு 3/3/2025 அன்று ஆளுநரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் அலுவலர்களுக்கான போக்குவரத்து சேவையில் ஏற்கனவே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அனைத்து பேருந்துகளும் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அலுவலர்களுக்கான போக்குவரத்து சேவைக்கான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும்.

அலுவலர்களுக்கான போக்குவரத்து சேவைக்குரிய தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பபடிவங்களை வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்வதற்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மே 1 ஆம் திகதிக்கு பின்னர் அலுவலக போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் யாவும் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு தற்காலிக அனுமதிப்பத்திரமின்றி சேவையாற்றும் பேருந்து களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8)

# மாவைக் கந்தனை தரிசித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ஹரிணி அமரசூரிய மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய மஹா கும்பாபிசேகம் நேற்றுக் காலை இடம்பெற்ற நிலையில் மதியம் பிரதமர் ஆலயத்திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

இதேவேளை பிரதமர் ஆலயத்திற்கு வருகை தர விருந்த நிலையில் அதிகாலை வேளை ஆலய சூழலில் பொலிஸ் விசேட அதிரடி படையினர், பொலிஸார் மற்றும் பிரதமர் பாதுகாப்புப் பிரிவினர் குவிக்கப்பட்டு, பாதுகாப்பு பலத்தப்படுத்தப்பட்டிருந்தது. (6-8-33)

# வலைப்பந்தாட்டப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கலைமகள் வெற்றிக் கிண்ணம்- (2025) இன் வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கலைமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கலைமகள் விளையாட்டுக் கழகத் தலைவர் து. பிரபாகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சி.ஜிவிந்தன் பிரதம விரந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழகம் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுமதியுடன் யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின்நாயகன் உதைபந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு பலாலி விண்மீன் அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு இளவாலை சென் லூட்ஸ் அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணியும் மோதவுள்ளன. (6-8-90)

# சித்திரை புத்தாண்டினை முன்னிட்டு மரதன் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் இணைந்து நடத்தும் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் நேற்று ஊடகங்களுக்கு விடுத்த செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலை 6 மணிக்கு யாழ். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி முன்றலில் நடைபெறும் மரதன் ஓட்டப் போட்டியானது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு, வெளி மாகாண சுற்றுலாப் பயணிகளுக்கு என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபெற விரும்புபவர்கள் google படிவத்தின் ஊடாகவோ அல்லது 077 742 6924/ 075 779 5733 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவோ தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும்.

வயது எல்லை 15 வயதுக்கு மேல் இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆகும்.

போட்டியின் போது மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் என ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (6-8)

# கிளி.மத்திய கல்லூரிக்கு சனத்ஜெயசூரிய விஜயம்



(தருமபுரம்)

இலங்கை துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரரும் தற்போதைய தலைமை பயிற்றுநருமான சனத் ஜெயசூரிய கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்திற்கு நேற்று பிற்பகல் விஜயம் மேற்கொண்டு மைதானத்தைப் பார்வையிட்டார். குறித்த மைதானத்தை புற்தரை மைதானமாக மாற்றி கிளிநொச்சி மாவட்டத்தின் துடுப்பாட்டத்துறையை வளர்க்கும் நோக்குடன் மைதானத்தை பார்வையிட்டதாக தெரிவித்தார். பாடசாலையின் முதல்வர் சவரி பூலோகராஜா மற்றும் கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச்சங்கத்தைச் சேர்ந்தோரும் கலந்து கொண்டிருந்தனர். (6-8-316)

# முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவர்கோவிலடி சனசமூக நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்ப்பாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.சிறீவர்ணன் கருத்துரை வழங்கவுள்ளார். (6-8)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் வெளிவந்துவிட்டது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடரின் 327 ஆவது மலர் வெளிவந்து விட்டது.

இம் மலரில் இந்து மதம் பற்றிய கண்ணோட்டம், பாசத் தளையறுக்கும் மாசிமக விரதம், பகவத்கீதையின் தத்துவம் ஆகிய பல ஆன்மிகத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஹஸ்தனவி மின் உற்பத்தி நிலைய உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

சஹஸ்தனவி மின் உற்பத்தி நிலையத்திற்காக மின்சாரத்தை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த மின் நிலையத்தின் கட்டுமானம், உரிமை மற்றும் செயற்பாட்டை சஹஸ்தனவி நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுவதாக மின்சார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அதன்படி, 25 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் உரிமை இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட உள்ளது.

இலங்கையில் உள்ள வீட்டு மற்றும் வணிக நுகர்வோருக்கு நம்பகமான மற்றும் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்கும் நோக்கத்துடன் இது செயற்படுத்தப்படுகிறது.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 350 மெகாவோட் சஹஸ்தனவி ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மின் உற்பத்தி நிலையம் ஆரம்பத்தில் 30 மாதங்களுக்குள் திறந்த சுழற்சி முறையில் தேசிய மின் கட்டமைப்புக்கு மின்சாரம் வழங்கும்.

பின்னர் அடுத்த 12 மாதங்களில் முழுமையான ஒருங்கிணைந்த சுழற்சி நடவடிக்கைகளைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. (6-8)

# முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிரான முறைப்பாடு தொடர்பான விசாரணைகளுக்காக வாக்குமூலம் பதிவு செய்வதற்காகவே அவர் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் எதிர்வரும் ஏப்ரல் 17 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆணைக் குழுவில் ஆஜராகி, உரிய வாக்குமூலம் அளிக்குமாறு இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-8)


## யா/வயாவிளான் மத்திய கல்லூரி மணிவிழா வாழ்த்து



திரு.சுந்தரம் சுதானந்தன்
SLTS-I

மலையகப் பாடசாலைகளிலும் பின்னர், எமது பாடசாலையிலும் ஆசிரியராக சேவையாற்றி 12.04.2025 இன்று ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு. **சுந்தரம் சுதானந்தன்** (SLTS-I) அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய பிரார்த்திக்கின்றோம்.

(3919)

Best Wishes

வாழ்த்துவோர்– ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/வயாவிளான் மத்திய கல்லூரி.



## கல்யாணமாலை

### சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
9 இல் செவ்
உயரம் : 5'6"
தகைமை/ தொழில்: BSc,MSc, Business(UK)
எதிர்பார்ப்பு:தகுந்த பெண்
தொ.இ: B/15319

பிறப்பு:1999-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம் :5'7"
தகைமை/ தொழில்:HND(IT), BEng, Software Developer(pvt)
எதிர்பார்ப்பு- தகுந்த பெண்
தொ.இ: B/15320

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:அனுசம் 3 இல் சூரி செவ்
உயரம் :5'5"
தகைமை/தொழில்: O/L,Canada
எதிர்பார்ப்பு: தகுந்த பெண்
தொ.இ: B/15322

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-2003-இந்து
நட்சத்திரம்:பூரம்
கி.பா:44
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:A/L,London
எதிர்பார்ப்பு: தகுந்த ஆண்
தொ.இ: G/15354

பிறப்பு-2001-இந்து
நட்சத்திரம்:சுவாதி
தகைமை/தொழில்:A/L,UNHCR
எதிர்பார்ப்பு: படித்தவர்
தொ.இ: G/15357

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா-35
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: LLB, AAL, Lawyer
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15358

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**63/3, ஆதன உத்தேச இலக்கம் 63/3A ,**
**மெய்கண்டான் பாடசாலை வீதி, வட்டாரம்-8**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 8, மெய்கண்டான் பாடசாலை வீதியிலுள்ள இல: 63/3, ஆதன உத்தேச இலக்கம் 63/3A ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சீனியர் சுந்தரம்பிள்ளை** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாய் ஓர் பகுதியினை **சின்னையா அப்புத்துரை பெண் கமலாதேவி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சொக்கலிங்கம் முகதாவில் 2142/ 19.11.1969 ஆம் இலக்க உறுதியால் சுந்தரம்பிள்ளை குணரத்தினமும், சுந்தரம்பிள்ளை இராசதுரையும், சுந்தரம்பிள்ளை உமாதேவியும், சுந்தரம்பிள்ளை ஈஸ்வரியும், சுந்தரம்பிள்ளை தவத்துரையும், சுந்தரம்பிள்ளை செல்வமணியும், சுந்தரம்பிள்ளை கைம்பெண் நல்லமுத்துவும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது. எங்கள் காலஞ்சென்ற பிதா சீனிவாசகம் சுந்தரம்பிள்ளையின் சொந்தமும் ஆட்சியுமாயிருந்து எங்களுக்கு வந்த முதுசமும் ஆட்சியுமானது எனக் குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியலாய் மற்றோர் பகுதியினை **நல்லையா வயித்திலிங்கம் பெண் இராசேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு அ.சொக்கலிங்கம் முகதாவில் 2925/10.12.1975 ஆம் இலக்க உறுதியால் பரமகுரு இராசகுருவும் பெண் மல்லிகாதேவியும், கதிரவேலு புனிதமலரும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது. எங்கள் காலஞ்சென்ற பிதா சீனிவாசகம் கதிரவேலுவின் சொந்தமும் ஆட்சியுமாயிருந்து எங்களுக்கு வந்த முதுசமும் ஆட்சியுமானது எனக் குறிப்பிட்டு குறிப்பிட்டே குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**நவரத்தினம் சேதுகாவலரும் பெண் இராசேஸ்வரியும், சின்னையா அப்புத்துரையும் பெண் கமலாதேவியும், நல்லையா வயித்திலிங்கமும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்கள் மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் சொரியல்ப் பங்கிற்கு சொந்தக்காரர்களாகவிருந்து குறித்த ஆதனங்களைச் சொரியலாக ஆட்சி செய்வது வசதியீனமாகயிருந்தமையால் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 411/ 09.12.1980ஆம் இலக்க உறுதியால் பிரிவிடல் செய்து நிந்தமாக்கப்பட்ட தத்தமது ஆதனங்களுக்கு சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

**அரியரத்தினம் பெண் தங்கம்மா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்டு 478/07.09.1981 ஆம் இலக்க உறுதியால் குறித்த **நவரத்தினம் சேதுகாவலரும் பெண் இராசேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி நிந்தமாக்கப்பட்ட ஆதனத்தின் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**சின்னையா அப்புத்துரை கைம்பெண் கமலாதேவி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1673/14.02.1991ஆம் இலக்க உறுதியால் குறித்த **அரியபுத்திரர் அரியரத்தினமும் பெண் தங்கம்மாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சின்னையா அப்புத்துரை கைம்பெண் கமலாதேவி** காலஞ்செல்ல குறித்த ஆதனம் முழுவதும் அவரின் ஏக வாரிசான **அப்புத்துரை திருக்குமார்** ஆகியவருக்கு முதுசமாக வந்தடைந்தது.

**பால ஈஸ்வரன் பெண் யதுர்ஷனி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9509/20.08.2021 ஆம் இலக்க உறுதியால் குறித்த அப்புத்துரை திருக்குமார் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **பாலஈஸ்வரன் பெண் யதுர்ஷனி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.


இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பால ஈஸ்வரன் பெண் யதுர்ஷனி ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உறவில் விழுந்த விரிசல்
### பங்களாதேஷிற்கு புதிய 'செக்'



(டில்லி)
பங்களாதேஷ் பொருளாதாரத்தை பாதிக்கக்கூடிய புதிய நடவடிக்கை ஒன்றை இந்தியா எடுத்துள்ளது.

இந்தியா வழியாக பொருட்களை ஏற்றுமதி செய்ய பங்களாதேஷிற்கு வழங்கப்பட்டிருந்த சலுகையை மத்திய அரசு இரத்து செய்துள்ளது.


5 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்த சலுகை நிறுத்தப்படுவதாகவும் தற்போது இந்திய விமான நிலையங்கள், துறைமுகங்களில் உள்ள பொருட்கள் மட்டும் வெளியேற அனுமதிக்கப்படும் என்றும், புதிதாக இனி அனுமதிக்கப்படமாட்டாது என்றும் மத்திய மறைமுக மற்றும் சுங்கவரிகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்திய ஆடை ஏற்றுமதியாளர்களின் கோரிக்கையை ஏற்று, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அரசின் இம்முடிவால் இந்திய ஆடை, காலணி, நகை தொழில் நிறுவனங்கள் ஆதாயம் அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா 37% பதில் வரி விதித்துள்ளதும் பங்களாதேஷ் பொருளாதாரத்தை பாதிக்கும் என கருதப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு பதில் வரி விதிப்பை 3 மாதங்களுக்கு தள்ளி வைக்க அமெரிக்காவை பங்களாதேஷ் கேட்டுக்கொண்டுள்ளது. (6-8)

# தீவிரமாகும் வ...
# மிரட்டல்களுக்கு அ...

## ட்ரம்பின் வரி விதிப்...



(பீஜிங்)

**பேச்சுவார்த்தைக்கு அமெ... அதற்கு சீனா தயாராக உள்... வார்த்தை பரஸ்பரம் ச... மரியாதை அடிப்படையில் இ... விதிப்பு தொடர்பான மிரட்டல்... அஞ்சமாட்டோம் என சீன... வித்துள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சீனப் பொருட்கள் மீதான வரிகளைக் கடுமையாக உயர்த்தியதால், பெரும்பாலான பொருட்கள் மீதான வோஷிங்டனின் மேலதிக வரி விகிதம் 145 சதவீதமாக உயர்ந்துள்ளதாக வெள்ளை மாளிகை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக சீன அரசின் வர்த்தகத்துறை செயலாளர் ஹே யோங்கியான் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் மோதலை நாங்கள் விரும்பவில்லை. அதே நேரத்தில் அந்நாட்டின் நெருக்கடிக்கு அடி பணிய மாட்டோம். சீனாவின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது. அமெரிக்கா தனது சொந்தப் பாதையில் பயணிக்க முடிவு செய்தால், சீனாவும் கடைசி

வ... து... புதி... ட்ர... பொ... வித... ஆ... மா...

# அணு ஆயுதங்களை கைவிட நினைப்பது பகல் கனவே
## வடகொரிய ஜனாதிபதியின் சகோதரி



(பியாங்யாங்)
வடகொரியாவை அணு ஆயுதங்களற்ற நாடாக்க விரும்பதாக அமெரிக்காவும் அதன் ஆசிய கூட்டாளிகளும் கூறுவது அந்த நாடுகளின் பகல் கனவு என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் - உன்னின் சகோதரி கிம் யோ ஜாங் தெரிவித்துள்ளார். அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கடந்த வாரம் நடத்திய மாநாட்டில் வடகொரியாவை அணு ஆயுதமற்ற நாடாக்க உறுதி பூண்டன.

இந்நிலையிலேயே மேற்கண்டவாறு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் - உன்னின் சகோதரி "வடகொரியா தனது அணு ஆயுதங்களைக் கைவிடச் செய்ய வேண்டும் என்று நினைப்பது வெறும் பகல் கனவு" அணு ஆயுத பலம் பெற வேண்டும் என்பது நாட்டின் அரசியல் சாசனத்திலேயே வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, வடகொரியாவை அணு ஆயுதமற்ற நாடாக்குவது தொடர்பாக பிறநாடுகள் ஆலோசிப்பது நாட்டுக்கு எதிரான கடுமையான செயல் ஆகும். வடகொரியா தனது அணு ஆயுத பலத்தை மேலும் அதிகரித்துக்கொள்வதை இது நியாயப்படுத்துகிறது எனத் தெரிவித்துள்ளார். (6-8)

## பாலஸ்தீனத்தை ...
## ஏற்றுக்கொள்ள பி...



(பாரிஸ்)
பாலஸ்தீனத்தை தனி நாடாக ஏற்றுக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

எ... இந்த... பதா... மக்... எ... முடி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ர்த்தகப்போர் அஞ்சமாட்டோம்!

## புக்கு சீனா பதிலடி



மெரிக்கா விரும்பினால்,
ள்ளது. ஆனால், பேச்சு
சமத்துவம் மற்றும்
இருக்க வேண்டும். வரி
ல்களுக்கு ஒரு போதும்
னா உறுதிபடத் தெரி

வரை போராடும். என தெரிவித்துள்ளார். பல நாடுகள் மீதான புதிய வரிகளை 90 நாட்களுக்கு ட்ரம்ப் இடைநிறுத்தியிருந்தாலும்,

கடந்த புதன்கிழமை சீனப் பொருட்களுக்கு 125 சதவீத வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார், ஆனால் பின்னர் வெள்ளை மாளிகை இது முந்தைய 20 சதவீத வரியுடன் கூடுதலாகும் என்று தெளிவுபடுத்தியது.

இதற்கு பதிலடியாக, சீனா வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் அமெரிக்க பொருட்களுக்கு 84% வரிகளை விதித்துள்ளது.

இதற்கிடையில், வோஷிங்டனை வரிக் கொள்கையில் இருந்து பின்வாங்க கட்டாயப்படுத்தும் ஒரு கூட்டணியை உருவாக்குவதற்காகவும், பதிலடி கொடுக்கவும் சீனா சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (6-8)

## கட்டுப்பாட்டை இழந்த ஹெலி ஆற்றில் விழுந்து விபத்து

### அறுவர் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் 3 குழந்தைகள் உட்பட 6 பேர் நேற்று முன்தினம் பலியாகினர்.

ஹட்சன் ஆற்றின் மீது லாங்ரேஞ்சர் ரக சுற்றுலா ஹெலிகொப்டர் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பறந்துகொண்டிருந்தது. இதன்போது, திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்த ஹெலிகொப்டர் ஆற்றில் விழுந்து நொறுங்கியது

இந்த விபத்தில், விமானி மற்றும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த தம்பதி மற்றும் அவர்களின் மூன்று குழந்தைகளும் பலியானதாக அமெரிக்க விமானப் பேரிடர் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஹெலிகொப்டர் புறப்பட்டு 18 நிமிடங்களில் ஹட்சன் ஆற்றின் பியர் 40 என்ற பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. சுதந்திர தேவி சிலை உள்ளிட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஜார்ஜ் வோஷிங்டன் பாலத்தை நோக்கித் திரும்பும்போது விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பலியான 6 பேரின் உடல்களும் மீட்கப்பட்டதாக நியூயோர்க்மேயர் எரிக் ஆடம்ஸ் தெரிவித்துள்ளார். மேலும், விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படும் என்று அமெரிக்க விமானப் போக்குவரத்துத் துறைதெரிவித்துள்ளது. (6-8)

## த தனி நாடாக பிரான்ஸ் முடிவு



எதிர்வரும் சில மாதங்களில் இந்தத் தீர்மானத்தை எடுக்க விருப்பதாகவும் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் அறிவித்துள்ளார்.

எகிப்துக்கான விஜயத்தை முடித்துக் கொண்டதன் பின்னர் அவர் இதுபற்றிய நிலைப்பாட்டை அறிவித்துள்ளார்.

அங்கீகாரத்தை நோக்கி நகர்வது அவசியம் என்றும் இதனை ஒருசில மாதங்களில் நிறைவேற்றவுள்ளதாகவும் பிரான்ஸ் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் 193 நாடுகளில் இதுவரை 147 நாடுகள் பாலஸ்தீனை தனி அரசாக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அந்தவகையில் கடந்த ஆண்டில் மாத்திரம் பத்துநாடுகள் பாலஸ்தீனை தனி நாடாக ஏற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## புதிய தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் காணும் சீனா அமெரிக்காவுடன் போட்டி

(பீஜிங்)

புதிய தொழில் நுட்பங்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதில் சீனா முன்னேறி வருவதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலக அறிவுசார் சொத்து அமைப்பின் 2020ஆம் ஆண்டின் தகவலின்படி, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் சீனா 14ஆவது இடத்திலும், அதுவே அதை சிறப்பாக பயன்படுத்துவதில் 47ஆவது இடத்திலும் இருந்தது. ஆனால் தற்போது தொழில்நுட்பங்களைச் சிறப்பான முறையில் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதில் சீனா 32ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. புதிய தொழில் நுட்பங்களை உருவாக்குவதில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் போட்டி நிலவி வருகிறது.

அமெரிக்காவின் ஓப்பன் AI நிறுவனம் அறிமுகப்படுத்திய சாட்ஜிபிடி, AI துறையில் புதிய பாய்ச்சலை நிகழ்த்தியது.

அதற்குப் போட்டியாக, மிகக் குறைந்த செலவில் டீப்சீக் சாட்பாட்டை உருவாக்கி AI பயணத்தில் புதிய திருப்பத்தை உருவாக்கியது சீனா. ஆனால், அமெரிக்காவுக்குப் போட்டியாக புதிய தொழில்நுட்பங்களை சீனா உருவாக்கினாலும், உருவாக்கும் தொழில்நுட்பங்களை பயன்பாட்டுக்குக் கொண்டுவருவதில் சீனாவைவிட அமெரிக்காவே முன்னிலை வகித்து வருகிறது.

அமெரிக்கா அதன் புதிய கண்டுபிடிப்புகளை, எளிதில் வணிகப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்துவிடும் நிலையில், சீனா அதன் தொழில் நுட்பங்களை அரசுப் பயன்பாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்தது. ஆனால், தற்போது இந்தப் போக்கில் மாற்றம் ஏற்படத் தொடங்கி இருக்கிறது என்கிறார்கள் சர்வதேச அரசியல் பொருளாதார நிபுணர்கள். புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளை அனைத்துத்துறைகளில் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதில் சீனா தீவிர கவனம் செலுத்தி வருவதாகக் கூறப்படுகிறது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மியன்மார் மக்களுக்கு 1 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியன்மார் மக்களுக்கு நிவாரணமாக இலங்கை அரசாங்கம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

அதற்கான காசோலை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இலங்கைக்கான மியன்மார் தூதுவர் மார்லர் தான் ஹடாயிக்கிடம் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளார்

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், பாதிக்கப்பட்ட மியன்மார் மக்களுக்கு நிதி உதவி மற்றும் சுகாதார பணிக்குழுவை அனுப்பி வைத்தமைக்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட அரசாங்கத்திற்கு இலங்கைக்கான மியன்மார் தூதுவர் நன்றி தெரிவித்தார்.

மேலும் இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான நீண்டகால மத மற்றும் கலாசார நட்புறவு இதன் காரணமாக மேலும் வலுவடையும் என்றும் கூறினார். (6-8)

# ஏப்ரல் மாதத்துக்கான அஸ்வெசும கொடுப்பனவு

(கொழும்பு)

ஏப்ரல் மாதத்துக்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு நேற்று முதல் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கபட்டுள்ளது என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி அஸ்வெசும நலன்புரித் திட்டத்தைப் பெறும் 1,037,141 குடும்பங்களுக்கு மொத்தமாக 12.63 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த குடும்பங்களில் உள்ள 70 வயதுக்கு மேற்பட்ட 5 80,844 சிரேஷ்ட பிரஜைகளுக்கு, மொத்தமாக 2.9 பில்லியன் ரூபாய் நலன்புரிக் கொடுப்பனவு வங்கிகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதாக அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார். (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 460 | 400 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 600 | 500 | 600 |
| தக்காளி | 350 | 550 | 400 | 350 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 250 | 300 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 280 | 300 |
| கரட் | 600 | 450 | 500 | 450 | 500 |
| பூசணி | 200 | 200 | 160 | 190 | 200 |
| புடோல் | 150 | 250 | 250 | 230 | 350 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 80-100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 150-250 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 150 | 160 | 180 |
| பாகற்காய் | 400 | 400 | 600 | 500 | 600 |
| வெண்டக்காய் | 350 | 350 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 400 | 250 | 250 | 300 |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 250 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 250 | 250 |
| பீற்றூட் | 400 | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 600 | 500 | 450 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 2500 | 2500 | 1600 | 1500-2500 | 2400 |
| போஞ்சி | 400 | 550 | 500 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 300 | 350 | 500 |
| கீரை - 1 பிடி | 120 | 80-120 | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 250 | 100 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 150-250 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 250 | 350 | 300 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 130 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 80 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | -- |

## இன்று ஒரு தகவல் 356



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பெருங்கருணை நாச்சியார்!

நந்திவர்மன் காலத்திலே நடந்த சம்பவம் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்! அது எப்படி உனக்குத் தெரியும் என்று கேட்கிறீர்களா? கல்வெட்டிலே இருக்கிறது.

நந்திக்கலம்பகத்திலே புகழ்பெற்றவன் மூன்றாம் நந்திவர்மன். அவன் ஆண்ட இடம் தெள்ளாறு! தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்று அவனைப் பற்றிப் பெருமையாக சொல்வார்கள்!

அந்தக் காலத்திலே அந்த ஊரிலே ஒரு தேர்தல் நடந்தது! உள்ளூராட்சித் தேர்தல். அந்த ஊருக்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு பெண்மணி!

அந்தப் பெண்ணுக்கு பெருங்கருணை என்று பெயர். அந்தப் பெண்தான் ஊராட்சி மன்றத் தலைவி!

ஒருநாள் மாலை அந்த ஊரிலே சில பெண்கள் குளத்துக்குப் போய் குடிநீர் எடுத்துக் கொண்டு குடத்தை இடுப்பிலே வைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

வழியிலே ஒரு ஆள் குடித்துவிட்டு அவர்களிடம் வம்பு செய்துகொண்டிருந்தான். அந்தப் பெண்களைப் பற்றி அவதூறான வார்த்தைகள் பேசினான். உடனே அந்தப் பெண்கள் ஊராட்சி மன்றத் தலைவியிடம் இதைப்பற்றி புகார் செய்தார்கள்.

அந்தத் தலைவி அதுதான் பெருங்கருணை உடனே வம்பு செய்த ஆசாமி யார் என்று விசாரித்துப் பார்த்தார். அது வேறு யாரும் இல்லை. தன்னுடைய கணவன் தான். நீதி தவறிவிட முடியுமா?

மறுநாள் ஊர்க்கூட்டம் நடந்து.

கிராம மன்றத்திலே அந்தக் குற்றவாளி விசாரிக்கப்படுகிறான். விசாரிக்கிறது மனைவி. பதில் சொல்வது கணவன். இருந்தாலும் தீர்ப்பு என்ன தெரியுமா?

இந்த ஊரிலே உள்ள திருமூலட்டானேஸ்வரர் கோவிலுக்கு சில பசுக்களை தானமாகக் கொடுக்க வேண்டும்! ஒரு மண்டலம் வரைக்கும் அதாவது 48 நாள் வரைக்கும் தினமும் பொழுது விடிவதற்கு முன்னால் கோவிலுக்குப் போய் முன்புறத்தை சுத்தப்படுத்த வேண்டும். மெழுக வேண்டும். பூமாலை கட்ட வேண்டும். அகல்விளக்கு எல்லாம் ஏற்றி வைக்க வேண்டும் இதுதான் தீர்ப்பு.

ஊர்க்கூட்டம் கலைந்தது!

மறுநாள் காலைப் பொழுது விடிவதற்கு முன்னால் அந்தக் கோவில் பக்கம் என்ன நடந்து கொண்டிருந்தது தெரியுமா?

தீர்ப்பு வழங்கிய அந்த கிராமத்துத் தலைவி பெருங்கருணை அம்மையாரே கோவிலுக்கு முன்பக்கம் மெழுகி சுத்தப்படுத்தி பூமாலைகட்டி அகல் விளக்கெல்லாம் ஏற்றி வைத்திருந்தார்.

தினமும் இதே மாதிரி செய்து கொண்டிருந்தார்.

ஊர் ஜனங்களுக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சிலபேர் நேரிலே கேட்டுக்கொண்டார்கள்!

ஏன் அம்மா தண்டனை பெற்றது உன்னுடைய கணவர் அவன் செய்ய வேண்டிய வேலையைத் தீர்ப்பு வழங்கிய நீ செய்துகொண்டிருக்கிறாயே! இப்படி செய்யலாமா? என்று கேட்டார்கள்.

இதற்கு அந்த அம்மா பதில் சொன்னார். குற்றம் செய்தவருக்கு குற்றத்திற்குரிய தண்டனை கொடுத்தேன். இந்த ஊருக்குத் தலைவி என்ற முறையிலே அதைச் செய்தேன்.

இப்போது மனைவி என்ற முறையிலே அவருடைய துன்பத்திலே பங்கேற்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது! அந்தக் கடமையைத் தான் இப்போது நான் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்! இதுதான் அந்த அம்மா சொன்ன விளக்கம்.

தன்னுடைய கணவனே ஆனாலும் குடிமயக்கத்தில் ஊர்ப் பெண்களைத் துன்புறுத்தியதற்கு உரிய தண்டனையைக் கொடுத்த செயலுக்காக பெருங்கருணை அம்மையாரை அந்த ஊர்மக்கள் குடிக்குறை துடைத்த நாச்சியார் என்று கல்வெட்டிலே பொறித்து வைத்திருந்தனர்.

இந்தக் காலத்திலேயும் அதுபோல சில பேர் உண்டு!

இந்தக் காலத்து இல்லத் தலைவி ஒருவர் மிகவும் சோகமாக இருந்தார். என்ன விடயம் என்று விசாரித்தேன்.

என்னுடைய கணவன் என்ன தவறு செய்தாலும் உடனே தண்டனை கொடுத்துவிடுவேன். கொடுத்த பிறகு அந்தத் தண்டனையை அனுபவிப்பது என் கணவன் என்று நினைத்து கவலைப்படுவேன் என்றார். என்ன மாதிரி தண்டனை கொடுப்பீர்கள் என்று கேட்டேன்.


பெரிதாக ஒன்றும் இல்லை அவர் செய்யும் ஒவ்வொரு தவறுக்கும் ஒவ்வொரு வேளை சாப்பாடு கிடையாது. அவ்வளவுதான்! இப்போது கூட அந்தத் தண்டனை தான் கொடுத்துவிட்டு வருகிறேன். அதுதான் மனதுக்கு கஷ்டமாக இருக்கிறது என்றார்.

இதற்காகவா இவ்வளவு சோகமாக இருக்கிறீர்கள் என்றேன்.

அவர் சாப்பிட்டு இன்றையோட 25 நாள் ஆகிறது அதுதான் கவலையாக இருக்கிறது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி பிரச்சினைக்கு தீர்வு கோரி மகஜர் கையளிப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த காணிகளை விடுவிக்கக் கோரி நேற்று கேப்பாபிலவு கிராம மக்கள் முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விரைவில் விடுவிக்கக்கோரி முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடமும், மற்றும் உயர் அதிகாரிகளிடமும் கடந்த வருடம் மகஜர் ஒன்றினை கையளித்திருந்தனர்.

அதற்கு தீர்வுகள் கிடைக்க பெறாத நிலையில் நேற்று கேப்பாபிலவு மக்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்று ஜனாதிபதியினுடைய சிரேஷ்ட உதவி செயலாளரைச் சந்தித்து கலந்துரையாடிய போது தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆவணங்கள் எம்மிடம் கிடைக்கவில்லை எனக் கூறியிருந்தனர்.

இதனையடுத்தே கேப்பாபிலவு மக்கள் முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் ஜனாதிபதி செயலகத்தில் கூறப்பட்ட விடயங்களை கூறி அரச அதிபரிடம் புதிய மகஜரை கையளித்திருந்தனர்.

இதன்போது முல்லை மாவட்ட அரச அதிபர் கேப்பாபிலவு காணி தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திற்கு தம்மால் அனுப்பி வைக்கப்பட்ட மகஜரினையும் அதற்கான பதில் கடிதத்தையும் கேப்பாபிலவு மக்களுக்கு காண்பித்து அது தொடர்பாக தெளிவுபடுத்தியிருந்தார்.

கேப்பாப்பிலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், ஆலயங்கள், தேவாலயம், பொதுநோக்கு மண்டபம் உள்ளிட்ட மக்களின் குடியிருப்புக்கள் இன்றும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

இந்நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநயாக்கா முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிற்கு வருகைதர இருப்பதனால் அவரிடமும் கேப்பாபிலவு மக்கள் மகஜரினை கையளிக்க இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# ரூ. 5 லட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்பு



(குருமன்காடு)

வவுனியாவில் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனத்தை பொலிஸார் விரட்டிப் பிடித்துள்ளதுடன், அதில் இருந்த இருவர் வாகனத்தை கைவிட்டு ஓடிச் சென்றுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸார் காலை வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது அவ் வீதி வழியாக வவுனியா நோக்கி வந்த பிக்கப் ரக வாகனம் ஒன்று நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து குறித்த வாகனத்தைப் பூவரசன்குளம் பொலிஸார் விரட்டிச் சென்றனர்.

இதன்போது குறித்த வாகனம் வவுனியா, விநாயகபுரம் பகுதியில் வேகமாக சென்று கொண்டு இருந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்துக்குளானதும், அதன் சாரதியும் அதில் இருந்த மற்றைய நபரும் தப்பி ஓடிய நிலையில் 5 லட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளுடன் குறித்த வாகனம் பொலிஸாரால் கைப்பட்டுள்ளதுடன் வாகன சாரதி மற்றும் அதில் பயணித்தவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பூவரசன்குளம் பொலிசார் மேலும் தெரிவித்தனர். (6-8-250)




கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புளியம்பொக்கனை கமநல சேவை பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் கெக்கரி கண்ணுருவையிட் என்னும் புதிய வகை இனம் முதன்முறையாக தருமபுரம் பகுதி விவசாயி ஒருவரினால் நடுகை செய்யப்பட்டு அதன் அறுவடை விழா நேற்று நடைபெற்றது.

குறித்த அறுவடை நிகழ்வில் கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர், வி.சோதிலட்சுமி, பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள் விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

(படம்: தேவானந்தம்)

# தேசத்தின் பாதுகாப்பிற்கே அரசு முன்னுரிமையளிக்க வேண்டும்

## பலாலி வீதி திறப்பு குறித்து நாமல்



(கொழும்பு)

தேர்தல்களை விட தேசத் தின் பாதுகாப்பிற்கே அர சாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்

பலாலி வீதி திறக்கப்பட்டமை தொடர்பிலேயே இவ்வாறு இதனை தெரிவித்துள்ளார்

மேலும் தெரிவித்துள்ளதாவது, வடபகுதி மக்களின் உணர்வுகளுடன் அசிங்கமான அரசியலில் ஈடுபடுவதை தேசிய மக்கள் சக்தி கைவிடவேண்டும்.

பலாலி வீதியை கடுமையான கட்டுப்பாடுகளுடன் அரசாங்கம் திறக்க தீர்மானித்துள்ளமை உண்மையாகவே கரிசனையளிக்கின்றது.

அந்த வீதி பாதுகாப்பு காரணங்களிற்காக மூடப்பட்ட போதிலும் அரசாங்கம் பாதுகாப்பு சரிபார்ப்பில் ஈடுபடாமல் இந்த வீதியை திறந்துள்ளது. இதன் காரணமாகவே கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இது அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும் புறக்கணித்து தேர்தலில் வாக்குகளை பெறுவதற்கான முயற்சி போல தோன்றுகின்றது. இவ்வாறான விடயங்களை செய்ய வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்தும் நான் தேர்தல்களை விட தேசத்தின் பாதுகாப்பிற்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார். (6-8)

# ஓமந்தை விளையாட்டு அரங்கை விரிவுபடுத்த நடவடிக்கை-அமைச்சர் சுனில்



(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்தி சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என விளையாட்டு துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அரங்குக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அதன் தேவைப்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். அதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், வன்னி மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கு ஓமந்தையில் அமைந்துள்ளது.

அங்கு பல தேவைகள் காணப்படுகின்றன. பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்றுவிப்பாளர்கள், அதற்கான உபகரணங்கள் என பல தேவைப்பாடுகள் இருக்கின்றன. அவற்றை எதிர்வரும் காலங்களில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்போது, அமைச்சருடன் கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் ஆகியோரும் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 746





இலங்கையில் மறுபடியும் போர் மூண்டதாகச் செய்தி வந்தது. அதை வெற்றிகரமாக முடிப்பதற்கு மேலும் படைகள் அனுப்ப வேண்டியிருந்தது. தெற்கே ஒரு பகைவனை வைத்துக் கொண்டு வடக்கே நெடுந்தூரம் சோழ நாட்டின் முக்கிய சேனா வீரர்களும், தளபதிகளும் போவதைச் சக்கரவர்த்தி விரும்பவில்லை. 'இலங்கைப் போர் முடிந்ததாகச் செய்தி வந்த பிறகு புறப்படலாம்' என்று கூறி வந்தார். இராஜாதித்யரும் தந்தையின் வார்த்தையைத் தட்ட முடியாமல் பொறுமையுடன் காத்திருந்தார். ஆனால் பகைவர்கள் அவ்விதம் காத்திருக்க இணங்கவில்லை. இரட்டை மண்டலச் சக்கரவர்த்தி கன்னரதேவனும் அதே சமயத்தில் சோழ நாட்டின் மீது படை எடுப்பதற்காகப் பெரிய சைன்யம் சேர்த்துக் கொண்டு வந்தான். அந்த மாபெரும் சைன்யத்துடன் அவன் தெற்கு நோக்கிப் புறப்பட்டு விட்டான். கங்க நாட்டு மன்னன் பூதுகனும், தன் பெரும் படையுடன் கன்னரதேவனோடு சேர்ந்து கொண்டான். வட கடலும் தென் கடலும் ஒன்று சேர்ந்தாற்போல் இரட்டை மண்டல சைன்யமும், கங்க நாட்டுப் பூதுகன் சைன்யமும் சேர்ந்து ஒரு மகா சமுத்திரமாகி முன்னேறி வந்தது. அந்தச் சமுத்திரத்தில் யானைகளாகிய திமிங்கிலங்கள் ஆயிரக்கணக்கிலும் குதிரைகளாகிய மகர மீன்கள் பதினாயிரக்கணக்கிலும் இருந்தன. பிரளய காலத்தில் ஏழு கடலும் சேர்ந்து பொங்குவது போல் பொங்கி முன்னேறி வந்த அந்தச் சேனா சமுத்திரம் தென்னாட்டை அடியோடு மூழ்க அடித்து விடும் என்று தோன்றியது. அந்தச் சைன்யத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டு முன்னால் வாயு வேக மனோவேகமாக ஓடி வந்து அறிவித்த நம் ஒற்றர்கள் அவ்வாறு சொன்னார்கள்."

"ஆனால் இதுவும் ஒரு விதத்தில் நல்லதே என்று பராந்தக சக்கரவர்த்தி கூறினார். நம்முடைய சைன்யங்களைத் தொலைதூரம் பிரயாணம் செய்யப் பண்ணி, பிரயாணக் களைப்புடன் பகைவர்களின் நாட்டில் எதிரி சைன்யத்துடன் போர் புரியச் செய்வதைக் காட்டிலும் எதிரி சைன்யங்களை நமது நாட்டுக்குச் சமீபமாக இழுத்து அவர்களை நாலாபுறமும் மடக்கி, வதம் செய்வதுதான் நல்ல போர் முறை என்று சக்கரவர்த்தி கூறினார். எதிரி சைன்யம் வடவேங்கடம் வரை நெருங்கி விட்டதென்று தெரிந்த பிறகுதான் பிரயாணப்படுவதற்கு அனுமதி கொடுத்தார்."

அனுமதி கிடைத்ததோ, இல்லையோ, இராஜாதித்யர் புறப்பட்டு விட்டார். மூன்று லட்சம் காலாள் வீரர்களும், ஐம்பதினாயிரம் குதிரை வீரர்களும், பத்தாயிரம் போர் யானைகளும், இரண்டாயிரம் ரதங்களும், முந்நூற்றிருபது தளபதிகளும், முப்பத்திரண்டு சிற்றரசர்களும் அப்பெரும் சைன்யத்தில் சேர்ந்து சென்றார்கள். அவர்களில் ஒருவனாகச் செல்லும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது. ஆனால் உயிர் பிழைத்துத் திரும்பி வந்த துர்பாக்கியசாலியும் ஆனேன்."

"மூன்று நாள் பிரயாணத்துக்குப் பிறகு காஞ்சிக்கு வடக்கே இரண்டு காத தூரத்தில் தக்கோலம் என்னும் இடத்தில் நம் படைகளும் எதிரி படைகளும் போர்க்களத்தில் சந்தித்தன!"

"ஆதித்தா! புராணங்களில் தேவேந்திரனுக்கும் விருத்திராசுரனுக்கும் நடந்த யுத்தம் பற்றிக் கேட்டிருக்கிறோம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஆடு மேய்ப்பவரும் காட்டு ஆடுகளும்



ஆடு மேய்ப்பவர் ஒருவர் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அவர் காட்டுக்குள் போய் ஆடு மேய்த்துக் கொண்டு இருந்தார்.

அது மழை காலம் என்பதனால் காட்டுக்குள் நிறைய உணவு கிடைக்கவில்லை. அதனால் தன்னுடைய வீட்டு விவசாய நிலத்தில் விளைந்த புல்லைப் போட்டு ஆடுகளை சிறிது நாட்கள் வளர்க்கலாம் என்று நினைத்தார்.

அந்த நேரத்தில் சில காட்டு ஆடுகளும் அவருடைய மந்தையில் [illegible] விட்டன.

அவைகளுக்கு தன்னுடைய வீட்டில் இருந்த சாப்பாட்டை கொடுத்ததும், அவை அனைத்தும் அங்கேயே தங்கிவிட்டன. செலவு இல்லாமல் நிறைய ஆடுகள் கிடைத்ததனால் அந்த ஆடு மேய்ப்பவருக்கு மிகவும் சந்தோசம் அதனால் புதிதாக வந்த காட்டு ஆடுகளுக்கு நிறைய உணவும், ஏற்கனவே இருந்த ஆடுகளுக்கு உயிர் வாழுகின்ற அளவுக்கு சாப்பாடும் கொடுத்தார்.

மழைகாலம் முடிந்ததும் அந்தக் காட்டு ஆடுகள் தங்களுடைய வாழ்விடமான காட்டுக்குப் போக ஆரம்பித்தது.

அதைப் பார்த்த ஆடு மேய்ப்பவருக்கு மிகவும் வருத்தமாக போய்விட்டது. நான் உங்களுக்கு நிறைய சாப்பாடு கொடுத்தும் இப்படி உங்கள் வாழ்விடத்துக்கு போகின்றீர்களே என்று கேட்டார். அதற்கு அந்த காட்டு ஆடுகள் கூறியது நீங்கள் புதிய ஆடுகள் வந்ததும் பழைய ஆடுகளுக்கு உணவு கொடுக்காமல் புதிய ஆடுகளுக்கு நிறைய உணவு கொடுத்தீர்கள்.

நாங்கள் உங்களுடனே தங்கிவிட்டால் நாங்கள் பழைய ஆடாக மாறிவிடுவோம். புதிய ஆடு ஏதாவது இங்கே வந்துவிட்டால் எங்களுக்குப் போதுமான உணவு கொடுக்க மாட்டீர்கள். அதனால் நாங்கள் எங்கள் வழியைப் பார்த்து விட்டு போகிறோம் என்று சொல்லி விட்டு காட்டுப் பகுதிக்கு போய் விட்டன.

புதிய ஆடுகள் வந்ததும் பழைய ஆடுகளுக்கு உணவு சரியாக கொடுக்காமல் விட்டதை நினைத்து வருத்தப்பட்டார் அவர்.

நீதி : புதிய நண்பர்களுக்காக பழைய நண்பர்களை மோசமாக நடத்துவது விவேகமற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உள்ளூராட்சி சபைகள் கணக்காய்வுக்கு உட்பட வேண்டும்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெற உள்ளது.

தேர்தல் முடிந்த கையோடு வெற்றி பெற்ற கட்சி அல்லது சுயேட்சைக்குழு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்கும்.

எனினும் கடந்த பல வருடங்களாக உள்ளூராட்சி சபைகளான பிரதேச, நகர, பட்டின, மாநகர சபைகளுக்குத் தேர்தல் இடம்பெறாத காரணத்தால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபைகள் இல்லாமல் போக, அந்தந்த சபைகளின் செயலாளர்கள் நிர்வாகத்தை முன்னெடுத்து வந்துள்ளனர்.

எனினும் குறிப்பிட்ட உள்ளூராட்சி அமைப்புகளின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற செயலாளர்கள் சிலர் எழுந்தமானமாக சபைகளை நடத்தி அவற்றின் செயற்பாடுகளை அலங்கோலப்படுத்தியுள்ளனர்.

அதிலும் குறிப்பிட்ட செயலாளர்கள் சிலர், கேள்வி அறிவித்தல்களை இருட்டடிப்புச் செய்கின்ற சதிவேலைகளை மிகக் கச்சிதமாகச் செய்துள்ளனர்.

அதிலும் குறிப்பாக கேள்வி அறிவித்தல்கள் தமக்குத் தெரிந்தவர்கள் அல்லது தமக்காக வேலைத்திட்டத்தைச் செய்கின்ற பிணாமிகள் மட்டும் அறிய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக கேள்வி அறிவித்தல்கள் உள்ளிட்ட விளம்பரங்கள் பொதுமக்களும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களும் அறிய முடியாத வகையில் கேள்வி அறிவித்தல்களை அமுக்கிவிடுகின்ற நுட்பங்களைக் கையாளுகின்றனர்.

இதற்கும் மேலாக, உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் சிலர் சபைகளின் செயற்பாடுகளை மந்தமாக்கி பொதுமக்களினதும் அரசாங்கத்தினதும் நிதியை வீணடித்துள்ளனர்.

அதேவேளை குறிப்பிட்ட உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் சிலர் வெளிப்படைத் தன்மையுடன் தமது சபை சார்ந்த அறிவிப்புக்களை – கேள்வி அறிவித்தல்களை பகிரங்கப்படுத்தி தமது நேர்மையை நிரூபித்துள்ளனர்.

அத்துடன் இவர்கள் அர்ப்பணிப்போடு சேவையாற்றியுள்ளனர். உண்மையில் இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

அதேசமயம் சபையின் கேள்வி அறிவித்தல்கள் பகிரங்கமாகாமல் இருக்க வேண்டும் என்ற ஈனத்தனத்துடன் செயற்பட்ட செயலாளர்கள் நிச்சயம் பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்டிருப்பர் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

இது தொடர்பில் பொதுமக்களும் வழங்குநர்களும் ஒப்பந்தகாரர்களும் தமது ஆதங்கங்களை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

எனினும் எழுந்தமானமாக எந்த முடிவுக்கும் வரலாகாது என்ற அடிப்படையில், பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகள் மீது கணக்காய்வுத் திணைக்களம் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதிலும் தேர்தலுக்கு முன்னதாக இதனைச் செய்யும்போதுதான் மக்களின் பிரதிநிதித்துவம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக, உள்ளூராட்சி சபைகளைக் கிளீன் செய்ய முடியும்.

## நாட்டின் அரசியல் மாறிவிட்டது இனவாதம் இனி இங்கு எடுபடாது

### அநீதி இழைத்தோருக்கு விரைவில் சிறை என்கிறார் பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம்

இனவாதத்தைக் கொண்டு இனியும் இந்த நாட்டிலே அரசியல் செய்ய முடியாது எனப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாட்டிலே பாரிய ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஆட்சியதிகாரம் தம்மை உயர்ந்த வர்க்கம் என்று கூறிக் கொள்பவர்கள் இடம்தான் இருந்தது. இலங்கை வரலாற்றில் முதல்முறையாக மூவின மக்களும் இணைந்து சாதாரண மக்களிடம் இந்த ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஒரு விவசாயியின் மகன் இன்று நாட்டிலே ஜனாதிபதியாக இருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ உட்பட தனிப்பட்ட ரீதியாக எந்த அரசியல்வாதிகள் மீதும் எங்களுக்கு கோபம் கிடையாது. அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் இந்த நாட்டின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன.

மக்களின் பணத்தில் தங்களுக்குச் சொத்துக்கள் குவித்தார்கள். கொலைக் கலாசாரத்தை உருவாக்கினார்கள். சாட்சிகளை அழித்தார்கள். ஆனால் இன்று எங்களுடைய ஆட்சியில் தான் எல்லாவிதமான குற்றச் செயல்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே மிக விரைவில் அநீதியில் ஈடுபட்டவர்கள் சிறையிலடைக்க படுவார்கள். தேசிய மக்கள் சக்தி மீது, மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை ஒருபோதும் வீணாகாது. மக்கள் எதிர்பார்த்த உண்மையான மாற்றத்தையும் ஆட்சியையும் மக்களுக்கு நிச்சயமாக வழங்குவோம் என தெரிவித்துள்ளார். (ம-4,7)

## புத்தாண்டு தினத்தில் இரத்ததான முகாம்

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் "புதுவருடத்தை நல்ல நிகழ்வுடன் ஆரம்பித்தல்" எனும் தொனிப்பொருளுக்கமைவாக இரத்ததான முகாமானது புதுவருட நன்நாளான நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் இரத்ததான முகாமானது 20 வருடங்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## நாட்டின் பல பாகங்களிலும்

## திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட நால்வர் பொலிஸாரால் கைது

நாடு முழுவதும் வாகனங்களைப் பயன்படுத்தி திட்டமிட்ட திருட்டுகளில் ஈடுபட்ட நான்கு பேர் கொண்ட கும்பல் 6 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களுடன் களுத்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை வடக்கில் உள்ள விற்பனை நிலையத்தில் நடந்த திருட்டு தொடர்பான விசாரணையின் போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது குறித்த குழுவினர் நாடு முழுவதுமுள்ள பெட்டரி மற்றும் எரிவாயு விற்பனை மையங்கள் மற்றும் பல கடைகளில் திருடப் பயன்படுத்திய வானையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (ம-4,7)

## கதாப்பிரசங்கப் பயிற்சிக் கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் கதாப்பிரசங்கப் பயிற்சிக் கருத்தரங்கு நிகழ்வானது நாளை ஞாயிற்றுக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு ய.அநிருத்தனன் அவர்கள் தலைமையில் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் இடம்பெறவுள்ளது.

கதாப்பிரசங்க வளவாளராக கதாப்பிரசங்க வித்தகர், கலைமாமணி, சைவப்புலவர் கலாநிதி சின்னத்தம்பி ஸ்ரீதயாளன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கதாப்பிரசங்கப் பாடநெறியில் கற்ற மாணவர்கள், கற்க இருக்கும் புதிய மாணவர்கள் மற்றும் கதாப்பிரசங்கத்தில் ஆர்வமுடையோர் யாவரும் பங்கேற்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,7)

## 85 ஆவது அகவையில் அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்

(அராலி)

யாழ்ப்பாணம் அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 85 ஆவது ஆண்டு விழாவின் முதல்நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் சனசமூக நிலையத்தின் கலையரங்கில் விழாக்குழுத் தலைவர் திருமதி மஞ்சுளா புஸ்பராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சனசமூக அங்கத்தவர்களின் பங்கேற்புடன் "மாறியது நெஞ்சம்" நாடகம், சிறப்புப்பட்டிமன்றம் உள்ளடங்கலாக பல்வேறு கலைகலாசார நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன. (ம-4,7)

## வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

வெளிநாட்டு சிகரெட்டுப் பெட்டிகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்த பயணி ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய வர்த்தகர் ஒருவரே துபாயில் இருந்து 15 ஆயிரம் சிகரெட்டுக்கள் அடங்கிய 75 சிகரெட் அட்டைப்பெட்டிகளை தனது உடமையில் மறைத்து வைத்திருந்தபோது விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட் தொகையின் பெறுமதி சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருவதுடன் விசாரணைகளின் பின் சந்தேகநபர் சான்றாதாரங்களுடன் கட்டுநாயக்க பொலிஸாரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படவுள்ளார். (ம-4,7)

## பெருந்தொகையான உலர் மஞ்சள் மீட்பு

### ஒருவர் கைது

(கொழும்பு)


கற்பிட்டி - பாலாவி பிரதான வீதி பகுதியில் கடற்படையினரால் பெருந்தொகையான உலர்ந்த மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கடற்படையினர் குறித்த பகுதியில் மேற்கொண்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான லொறியொன்றினை சோதனையிட்டுள்ளனர்.


இதன்போது குறித்த லொறியில் சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட 31 உர மூடைகளில் அடைக்கப்பட்ட ஆயிரத்து 142 கிலோ 700 கிராம் உலர் மஞ்சள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த லொறியின் சாரதி சந்தேகத்தின் பெயரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜன் - கதிர்காமர் வெற்றிக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று



சென். பற்றிக்ஸ்



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிகளுக்குமிடையிலான ராஜன் - கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட 32 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (6-8)

# எல்லே போட்டியில் சம்பியனானது கிளி.புனித திரேசா பெண்கள் கல்லூரி



கிளிநொச்சி தெற்கு வலய மட்ட பெண்களுக்கான எல்லே போட்டியில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி அணி சம்பியனானது.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் 2025 ஆம் ஆண்டுக் கான பெரு விளையாட்டுக்களின் வரிசையில் பெண்களுக்கான எல்லே போட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் கரியாலை நாகபடுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் புனித திரேசா பெண்கள் கல்லூரியும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின.

இறுதிப்போட்டியில் புனித திரேசா பெண்கள் கல்லூரி அணி 5:1என்ற கணக்கில் கரியாலை நாகபடுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை வீழ்த்தி சம்பியனாகியது. (6-8-316)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3323

பவானி




நிதுஷ்





தர்மினி




கஜவர்ஷன்




வருண்




கதீஸ்




நீங்கள் பார்த்த் பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலஞ்ச ஊழல்...

2016ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றியபோது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவை காசோலையாக பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தி ஊழலில் ஈடுபட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், சாமர சம்பத்துக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க பல விடயங்களை அறிந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.

இதனையடுத்து, இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராக நான் தயார் என ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். (ம-7,4)

## மாவைக் கந்தன்...

நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

கும்பாபிஷேகப் பெருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் ஆலயத்திற்குப் பிரதமர் ஹரிணி அமரசூரிய வருகை தரவுள்ளதாகத் தெரிவித்து, ஆலய சூழலில் பெருமளவான பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், பிரதமர் பாதுகாப்புப் பிரிவினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டது.

அதிகாலை வேளையில் ஆலய வழிபாட்டிற்கு வருகை தந்த குருக்கள் மாரையும் பக்தர்களையும் கடுமையான உடற்சோதனைக்கு உட்படுத்தியே ஆலய வளாகத்தினுள் அனுமதித்தனர்.

இதனால் ஆலயத்திற்கு வருகை தந்தவர்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டனர். (ம-7,4)

## யாழில் தேர்தல்...

ஆணைக் குழுவின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த பிரதமர், காரைநகர் மற்றும் நீர்வேலியில் கூட்டங்களில் பங்குபற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரண்டு கூட்டங்களின் மேடைகள் மற்றும் சின்னங்கள் விதிமுறைமீறலாக அமைக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டது.

முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்ற மாவட்ட தேர்தல் கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் ஆலய நிர்வாகங்களுக்கும், ஏற்பாட்டாளர்களுக்கும் எழுத்தில் அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இதற்கமைய ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள மேடை மற்றும் சுற்றுப் புறத்தில் தேர்தல் தொடர்பான சின்னங்கள் எவையும் காட்சிப்படுத்தக் கூடாது என்பதனை ஆலய நிர்வாகங்கள் உறுதி செய்ய வேண்டும், இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள மேடையில் பிரதமருடன் எந்தவொரு வேட்பாளரும் பிரசன்னமாக முடியாது, இதனைக் கூட்ட ஏற்பாட்டாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்டிப்பாக வலியுறுத்தினர்.

இதனையடுத்து அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பிரதமரின் பதாகைகள் அகற்றப்பட்டன. (ம-7,4)

## திருநெல்வேலி...

வேலி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் பலாலி வீதியால் குறித்த பெண் நடந்து சென்றபோது அவ் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பி விட்டு வெளியேறிய டிப்பர் மோதியதில் தலை நசுங்கி குறித்த பெண் பலியானார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4,60)

## குடும்பஸ்தர்...

தந்தையான வின்சன் விமல் (வயது- 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 30ஆம் திகதி சவுதி அரேபியாவில் இருக்கும் மனைவியுடன் தொலைபேசியில் கருத்து முரண்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் தலைமன்னார் விளையாட்டு அரங்கில் தனக்குத்தானே தீ மூட்டியுள்ளார். தீக்காயத்துக்குள்ளான குறித்த குடும்பஸ்தர் அங்கிருந்து மீட்கப்பட்டு தலைமன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 2ஆம் திகதி மாற்றப்பட்டார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4,60)

## வவுனி...

பிரிவுக்குட்பட்ட கோயில் புளியங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா பெரலில் மீட்கப்பட்டதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த நபரும் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,4,250)

## வட...

நான்கு பிரதான வீதிகளிலும் வீதி வளைவுகள் அமைக்கப்படுகின்றன. இதனொரு கட்டமாக வடக்குப் புறமாக கோவில் வீதியில் வீதி வளைவு அமைக்கப்படவுள்ளது.

அதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று அதிகாலை நடைபெற்றது.

இதன் போது ஆலய நிர்வாகத்தினர்,யாழ்.மாநகர ஆணையாளர், அப்பகுதி மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ம-7,4,33)

## அதிவேக...

மே முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன்படி, அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது debit மற்றும் credit அட்டைகளை பயன்படுத்தி பணம் செலுத்த முடியும்.

கொட்டாவை மற்றும் கடவத்தை சந்திப்புகளில் இது ஏற்கெனவே ஒரு முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (ம-7,4)

## மாகாண சபைத்...

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றத்திற்கு மக்களே காரண கர்த்தாக்கள் எனவும் மக்கள் தமது அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கை எதிர்பார்ப்புகளை பேணிப் பாதுகாத்து நேர்மையாக பொறுப்புடன் பணியாற்றுவதே தமது கடமை எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (ம-7,4)

மஹஜன சம்பத
திகதி 2025.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 5803
T 8 8 6 1 7 0
அத சம்பத T 6 1 7 0
சீட்டிழுப்பு இலக்கம் 378
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1833
W 06 17 21 30 W
Double Chance 70151

மெகா பவர்
திகதி 11/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2151
R 19 12 33 36 69

ஜய
திகதி 2025.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 0071
L 1 0 1 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4045
சீட்டிழுப்பு திகதி 11.04.2025
O 06 30 39 78
O

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 1112
விருச்சிகம் 02 46 55 61 விருச்சிகம்
27035 06

உத்தியோகபூர்வ முடிவுகள்
11.04.2025 வெற்றி வாரம் 511
M 7 0 9 8 3 3
91569
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,465,374.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2777
சீட்டிழுப்பு திகதி 2025.04.11 தினம் வெள்ளிக்கிழமை
22 45 54 76 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,260,880.80

சனிதா
திகதி 11.04.2025 வெற்றி வாரம் 4938
15 17 50 77 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,451,862.40
79466

சசிரி
வெற்றி வாரம் 662
சீட்டிழுப்பு திகதி 11.04.2025 வெள்ளிக்கிழமை
11 21 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4489
சீட்டிழுப்பு திகதி 11.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
02 07 53 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,870,130.80
238638

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 38 38 60 63 66
1953
11.04.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.572,035,551.20

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2603
சீட்டிழுப்பு திகதி 2025.04.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,972,300.00
11 24 31 43 I
195736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 219/= | Max 5Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 259/= | |
| 1Kg றவை | - 290/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 243/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கீரி சம்பா | - 260/= | Max 2Kg |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 380/= | |
| 1Kg சோயா | - 360/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2850/= | ~~3000/=~~ |
| 700g சுபோஷா | - 570/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 180Ml சன்சில்க் சம்போ(மஞ்சள்) | - 380/= | ~~480/=~~ |
| 1.5 ℓ பெப்சி சோடா | - 310/= | ~~360/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~

1Kg சன்லைட் பௌடர் 270/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(1015)

Happy Supermarket
0777 8080 30



# வீடு வாடகைக்கு

வலிகாமம் மேற்கு சித்தன்கேணி, பண்டத்தரிப்பு பிரதான வீதிக்கு அருகில் நல்ல சூழலில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**071 828 5673**

(3906)



# காணி விற்பனைக்கு

நீர்வேலி சிறுப்பிட்டியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

ஒரு பரப்பின் விலை 12 லட்சம்

தொடர்புகளுக்கு:

**077 820 9424**

(3870)



# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 12 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17,00 000/=). இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=), பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
- கரவெட்டிப் பிரதேச சபை 1Km தூரம்
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)

தொடர்புகளுக்கு:

**076 860 2770, 076 987 8617**
**076 935 3971**

(3929)



# Pearson International College



- இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
- கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
- எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
- இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

**074 188 7878, 074 385 7584**
www.picsl.lk

TESL CANADA
TESL Ontario

(1009)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



# கார் விற்பனைக்கு

HONDA FIT - GP 5, S Grade, 1500cc Hybrid, Automatic, Black, 2015 model, Fully Loaded. நல்ல நிலையிலுள்ள உயர் தரத்திலான கார் யாழ்ப்பாணத்தில் உடனடி விற்பனைக்கு உண்டு. விலை - 94 இலட்சம். பேசித் தீர்மானிக்கலாம்.

(1014)

தொடர்பு: Ramesh

**0777 033 648**



# உடனடி வேலை வாய்ப்பு

## நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-2673)



# யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

## ஆடைகளின் சாம்ராஜ்யம்

# இந்தியன் செலக்‌ஷனின்

## சித்திரைப் புத்தாண்டு





ஜவுளிக் கொண்டாட்டம்

- திருமணப்பட்டுச் சாறிகள்
- கொட்டன் சாறிகள், சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- புத்தம் புது டொப் வகைகள்
- சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத் தெரிவுகள்

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம் : 05.04.2025 முதல்
சித்திரைப் புத்தாண்டு வரை
(வாரத்தின் 7 நாட்களும்)

(1013)


# மணிவிழா நாயகியை

## சேவை நயந்து வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியையாக பணியாற்றி 12.04.2025 இன்றுடன் இளைப்பாறும்

## திருமதி மங்களேஸ்வரி செல்வரத்தினம்

(பயிற்றப்பட்ட இந்துசமய ஆசிரியை - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)



**சேவைவிபரம்**

1. ப/சார்னியா தமிழ் மகா வித்தியாலயம்
   16.04.1985 - 14.02.1988
2. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
   15.02.1988 - 31.12.1989
3. கிளி/முரசுமோட்டை றோ.க. பாடசாலை
   01.01.1990 - 09.06.1991
4. கிளி/ முருகானந்தா மகா வித்தியாலயம்
   10.06.1991 - 24.05.1992
5. யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
   25.05.1992 - 21.02.1993
6. யா/யாழ்ற்ரன் கல்லூரி
   22.02.1993 - 31.12.1995
7. கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
   01.01.1996 - 12.05.1996
8. வ/இரம்பைக்குளம் மகளிர் ம.வி
   13.05.1996 - 08.01.2012
9. யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
   09.01.2012 - 11.04.2025

தாயாய் அரவணைக்கும் தாமரை நிகர்த்த முகம்
வானாய் விரிந்துயர்ந்த அன்பு தாழா மனம்
மங்களேஸ்வரி யென்னும் மாட்சிமை பெயர் பூண்ட
இந்துவின் மங்கள நாயகியே உம் பணி வியந்து
ஓய்வு காலம் மகிழ்வுடன் மலர்ந்திட இன்பமாய் வாழ்த்துகிறோம்.

Best Wishes!

ஆசிரியர் கழகம் (2025), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(3898)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org